# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 14,879/7 — 1969 නොවැම්බර් 18 වැනි අඟහරුවාද — 1969.11.18

14,879/7 ம் இலக்கம் — 1969 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18 ந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### இலங்கை அரச ஈட்டு வங்கி

**உரிமையாக்கற் கட்டளை இல. 5**

1931 ம் ஆண்டின் 16 ஆம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின் (1956 ஆம் ஆண்டின் சட்டவாக்கங்கள் அதி. 398) ஏற்பாட்டின் கீழ் முறையாக இணைக்கப்பட்ட ஒரு கூட்டுத்தாபனமாகிய இலங்கை அரச ஈட்டு வங்கியானது, 1968 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க இலங்கை அரச ஈட்டு வங்கியும் நிதியும் (திருத்தச்) சட்டத்தால் திருத்தப்பட்ட இலங்கை அரச ஈட்டு வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 70 (பி) (6) ஏற்பாட்டின் கீழ் இதனகத்துள்ள அட்டவணையில் முற்ருக விபரிக்கப்பட்ட வளவுகளை 1968 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட மேலே கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் அத்தியாயம் ஐந்து எ நோக்கங்களுக்காக உரிமையாக்கத் தீர்மானித்துள்ளமையாலும்,

மேலே கூறப்பட்ட சட்டத்தின் 70 சி (1) பிரிவின் ஏற்பாட்டின்படி வங்கியின் இயக்குநர் சபைத் தலைவர் அத்தகைய தீர்மானத்தை நிதி அமைச்சருக்கு அறிவித்துள்ளமையாலும்,

மேலே கூறப்பட்ட சட்டத்தின் 70 சி (2) பிரிவின் ஏற்பாட்டின் கீழ் இதனகத்துள்ள அட்டவணையில் முற்ருக விபரிக்கப்பட்ட வளவுகளை இலங்கை அரச ஈட்டு வங்கிக்கு உரிமையாக்க நிதி அமைச்சர் அதிகாரம் பெற்றுள்ளமையாலும்,

நிதி அமைச்சர் உக்கு பண்டா வன்னிநாயக்கா ஆகிய நான் இதனகத்துள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள வளவுகளை இத்தால் ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்தொன்பதாம் ஆண்டு நவம்பர் மாதம் பன்னிரண்டாம் தேதியிலிருந்து இலங்கை அரச ஈட்டு வங்கிக்கு உரிமையாக்கிக் கட்டளையிடுகின்றேன்.

யூ. பி. வன்னிநாயக்க,
நிதி அமைச்சர்.

கொழும்பு,
1969 ம் ஞூ நவம்பர் மீ 12 ந் நாள் தேதியிடப்பட்டது.

### மேற்குறித்த பட்டோலை

**1.** கீழ் மாகாணம், அம்பாறை மாவட்டம் (முன்பு மட்டக்களப்பு), நிந்தவூர் பற்று, நிந்தவூர் 4 ஆம் குறிச்சியில், வடக்கில் ஏ. செயினம்பு உம்மாவிற்குரிய இக்காணியின் மறு பகுதியையும், தெற்கில் தற்பொழுது சிறு தெருவையும், கிழக்கில் ஏ. பாத்தும்மாவிற்குரிய இக்காணியின் மறு பகுதியையும், மேற்கில் ஏ. சுலைக்காஉம்மாவிற்குரிய காணியையும் எல்லைகளாகக் கொண்ட லொட் 9676 லுள்ள தென் கிழக்குப் பகுதியாகிய பாலையடிவளவின் மேற்குப்பகுதி, வடக்கில் இருந்து தெற்குவரை பதின்மூன்று (13) பாகங்களும், கிழக்கிலிருந்து மேற்கு வரை பதின்மூன்றரை ($13\frac{1}{2}$) பாகங்களையும், விஸ்தீரணமாகக் கொண்டதும், மட்டக்களப்பு மாவட்டம், அம்பாறை காணிப்பதிவகத்தில் ஈ. 40/157 இன் கீழ் பதிவு செய்யப்பட்டதுமான காணியிலுள்ள மரங்களும் பயிர்களும் கட்டடங்களும் அதிலுள்ளவை யாவும்.

உத்தரவு பெற்ற நிலவளவையாளரான எச். ஜே. ஜே. எஸ்டகோப்பிள்ளை அவர்களால் தயாரிக்கப்பட்ட இல. 18 உம், 18.4.1968 ந் திகதியிடப்பட்டதுமான காணிப்படத்தின் பிரகாரம் மேற்கூறிய காணியானது இப்பொழுது இருபதரை பேர்ச்சஸ் (0 எக்., 0 றூ., $20\frac{1}{2}$ பேர்.) விஸ்தீரணமாகும்.

(கோப்பு இல. டிடீஆர்/49).

**2.** கீழ் மாகாணம், திரிகோணமலை மாவட்டம், திரிகோணமலை நகரம், 9 ம் குறிச்சியில், வட-கிழக்கில் தெருவையும், வட-மேற்கில் கணபதி முருகுப்பிள்ளையின் உரிமையாளருடைய காணியையும், தென்-மேற்கில் கைம்பெண் வேலாத்தை சண்முகத்தினது காணியையும் தென்-கிழக்கில் எஸ். வேலுப்பிள்ளையினது உரிமையாளருடைய காணியையும் எல்லைகளாகக் கொண்டதும், எட்டொடு பத்தில் எட்டு பேர்ச்சஸ் (0 எக்., 0 றூ., 8,8/10 பேர்.) விஸ்தீரணமும், உத்தரவு பெற்ற நிலவளவையாளரான ரி. சுப்பிரமணியர் அவர்களால் தயாரிக்கப்பட்ட இல. 80 உம் 12.3.1934 திகதியும் கொண்ட காணிப்படத்தில் வரையப்பட்டுள்ளதும், திருகோணமலை மாவட்ட காணிப்பதிவகத்தில் ஏ. 25/53 இன் கீழ் பதிவு செய்யப்பட்டதுமான காணியிலுள்ள மரங்களும், பயிர்களும், திருகோணமலை நகரத்தில் வரிமதிப்பெண் 13ஐ கொண்ட ஓலை வீடும் அதிலுள்ளவை யாவும் உட்பட).

(கோப்பு இல. டிடீஆர்/74).

**3.** வட மாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வடமராட்சிப்பகுதி, உடுப்பிட்டி கோயிற்பற்று உடுப்பிட்டி இறையில், கிழக்கில் சேமக்காலை நிலத்தையும் வேலாயுதர் முத்தையாவினதும் பிறரினதும் உரிமையாளருடைய நிலத்தையும், வடக்கில் கடற்கரையையும், மேற்கில் விநயக சுந்தரத்தின் மகள் சந்திரகாந்திக்குரிய காணியானது இப்பொழுது தங்கவடிவேலு திருநாவுக்கரசுவிற்கும் பெண் சந்திரநாயகிக்கும் உரிய காணியையும், தெற்கில் தெருவையும் எல்லைகளாகக் கொண்ட நாவலடியிற் கலட்டி, மருதங்குளி, அடிச்சிப்புலம், வாய்க்கால் மணல் எனும் காணியானது பத்து லாச்சம் வரகு விவசாயமும், மூன்றெடு பன்னிரண்டில் பதினொரு குளிகள் (10 லாச்சம்ஸ் வ. வி. 3, 11/12 குளிகள்) விஸ்தீரணமும், பருத்தித்துறை மாவட்டக் காணிப்பதிவகத்தில் ஏ. 95/21 இன் கீழ் பதிவு செய்யப்பட்டதுமான காணியிலுள்ள மரங்களும், பயிர்களும், அதிலுள்ளவை யாவும் உட்பட.

உத்தரவு பெற்ற நிலவளவையாளரான பி. ஏரம்பு அவர்களால் தயாரிக்கப்பட்ட இல. 224 உம், 1.4.1966 திகதியும் கொண்ட காணிப்படத்தின் பிரகாரம் மேற்கூறிய காணியானது பத்து லாச்சம்ஸ் வரகு விவசாய (10 லாச்சம்ஸ் வ. வி.) விஸ்தீரணமாகும்.

(கோப்பு இல. டிடீஆர்/92).

4. வட மாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வட பகுதி மயிலிட்டி கோயிற்பற்று மயிலிட்டியில், (காணிப்படத்தின் பிரகாரம் பெரிய நாட்டன் தெரன்துறை) கிழக்கில் சிறு ஒழுங்கையையும், வடக்கில் கடற்கரையையும், மேற்கில் மூத்ததம்பி நல்லதம்பிக்குரிய ஆதனமானது இப்பொழுது நல்லதம்பியின் பெண் பொன்னம்மாவிற்குரிய ஆதனத்தையும், தெற்கில் கைம்பெண் நாகபிள்ளை சோமசுந்தரத்தினது ஆதனத்தையும் எல்லைகளாகக் கொண்ட ஆலடியிற்காடு (காணிப்படத்தின் பிரகாரம் ஆலடிக்காடு) எனும் காணியானது, இரண்டு லாச்சம்ஸ் வரகு விவசாயமும், மூன்று குளிகள் (2 லாச்சம்ஸ் வ. வி. 3 குளிகள்) விஸ்தீரணமும், யாழ்ப்பாண மாவட்ட காணிப்பதிவகத்தில் எச். 304/212 இன் கீழ் பதிவு செய்யப்பட்டதுமான காணியிலுள்ள மரங்களும், பயிர்களும், அதிலுள்ளவை யாவும் உட்பட.

உத்தரவு பெற்ற நிலவளவையாளரான ஆர். சி. லோரன்ஸ்பிள்ளை அவர்களால் தயாரிக்கப்பட்ட இல. 430 உம், 14.6.1966 திகதியிடப்பட்டது மான காணிப்படத்தின் பிரகாரம் மேற்கூறிய காணியானது ஒரு லாச்சம் வரகு விவசாயமும், பதினாலு குளிகள் (1 லாச்சம் வ. வி. 14·0 குளிகள்) விஸ்தீரணமுமாகும்.

(கோப்பு இல. டிடீஆர்/119).

5. வட மாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வடமராட்சிப் பகுதி கட்டைவேலி கோயிற்பற்று, கரவெட்டி வென்றிக்குறிச்சியில், கிழக்கில் கந்தன் வள்ளிக்குரிய காணியையும், வடக்கில் சின்னப்பொடியன் தம்பனினதும் பெண் சின்னம்மாவினதும் காணியையும், மேற்கில் கணபதியின் கைம்பெண் வைரவியினதும் பிறரினதும் ஆதனத்தையும், தெற்கில் ஒழுங்கையையும் எல்லைகளாகக் கொண்ட நாவல்நின்றோலை எனும் மூன்று லாச்சம் வரகு விவசாயமும், பன்னிரண்டு குளிகள் (3 லாச்சம்ஸ் வ. வி. 12 குளிகள்) விஸ்தீரணமும், பருத்தித்துறை மாவட்ட காணிப்பதிவகத்தில் ஏ. 133/117 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டது மான காணியிலுள்ள மரங்களும், பயிர்களும் அதிலுள்ளவை யாவும் உட்பட.

உத்தரவுபெற்ற நிலவளவையாளரான வி. சிவரட்னம் அவர்களால் தயாரிக்கப்பட்ட இல. 2,683 உம் 22.11.1967 திகதியும் கொண்ட காணிப் படத்தின் பிரகாரம் மேற்கூறிய காணியானது இப்பொழுது மூன்று லாச்சம்ஸ் வரகு விவசாயமும் இரண்டு குளிகள் (3 லாச்சம்ஸ் வ. வி. 02 குளிகள்) விஸ்தீரணமாகும்.

(கோப்பு இல. டிடீஆர்/171)

6. வட மாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வடமராட்சிப் பகுதி பருத்தித்துறை கோயிற்பற்று சிங்கபாகுதேவன்குறிச்சி இறை புலோலி மேற்கில், உத்தரவு பெற்ற நிலவளவையாளரான ஜி. சி. கணபதிப் பிள்ளை அவர்களால் தயாரிக்கப்பட்ட இல. 2,667 உம் 7.8.1913 திகதியும் கொண்ட 2 ம் துண்டுக் காணிப்படத்தின் பிரகாரம், கிழக்கில் தெருவையும், வடக்கில் கணபதிப்பிள்ளையின் பெண் கதிராத்தையினது ஆதனமானது இப்பொழுது மேற்கூறப்பட்ட காணிப்படத்தில் 1 ம் துண்டுக் காணியையும், மேற்கில் வேலப்பர் தம்பிமுத்துவினது பெண் இரத்தினத்திற்குரிய ஆதனமானது இப்பொழுது வல்லியர் கணபதியரினதும் பிறரினதும் ஆதனத்தையும், தெற்கில் முருகப்பர் பெரியதம்பியினதும் பிறரினதும் ஆதனமானது இப்பொழுகு மேற்கூறிய காணிப்படத்தில் 3 ம் காணித்துண்டையும் எல்லைகளாகக் கொண்ட வல்லபெருமாள் மரக்காய் மேற்கூறிய காணிப்பட இல. 2,667 இன் பிரகாரம் ஒரு லாச்சம் வரகு விவசாயமும் ஒன்பதொடு எட்டில் ஐந்து குளிகள் (1 லாச்சம் வ. வி. 9, 5/8 குளிகள்) விஸ்திரணமும், பருத்துத்துறை மாவட்டக் காணிப் பதிவகத்தில் ஏ. 54/119 இன் கீழ் பதிவு செய்யப்பட்டதுமான காணியிலுள்ள மரங்களும், பயிர்களும் அதிலுள்ளவை யாவும் உட்பட.

(கோப்பு இல. டிடீஆர்/172)

7. வட மாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வடபகுதி மல்லாகம் கோயிற்பற்று அளவெட்டியில், கிழக்கில் சின்னப்பு பொன்னையாவின் பெண் சரஸ்வதிதேவியின் ஆதனத்தையும், வடக்கில் வயிரமுத்து பொன்னுத்துரையிற்கும் பங்காளருக்குமுரிய பொதுப் பாதைக்குரிய நிலத்தையும், மேற்கில் ஒழுங்கையையும், தெற்கில் ஒழுங்கையையும், கார்த்தி வல்லிபுரத்தினதும் பிறரினதும் ஆதனத்தையும் எல்லைகளாகக் கொண்ட கலையவுடை எனும் பத்து லாச்சம்ஸ் வரகு விவசாயமும் பத்தொடு பத்தில் ஒன்பது குளிகள் (10 லாச்சம்ஸ் வ. வி. 10, 9/10 குளிகள்) விஸ்தீரணமும், யாழ்ப்பாண மாவட்ட காணிப் பதிவகத்தில் எச். 377/108 இன் கீழ் பதிவு செய்யப்பட்டதுமான காணியிலுள்ள மரங்களும், பயிர்களும் அதிலுள்ளவை யாவும் உட்பட.

உத்தரவு பெற்ற நிலவளவையாளரான டி. கந்தையா அவர்களால் தயாரிக்கப்பட்ட இல. 3,284 உம் 1.9.1967 திகதியும் கொண்ட காணிப் படத்தின் பிரகாரம், மேற்கூறிய காணியானது இப்பொழுது பத்து லாச்சம்ஸ் வரகு விவசாயமும் பதினறரை குளிகள் (10 லாச்சம்ஸ் வ. வி. 16½ குளிகள்) விஸ்தீரணமாகும்.

(கோப்பு இல. டிடீஆர்/181)

8. வட மாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் சண்டிக்குளிப் பகுதி சண்டிக்குளி கோயிற்பற்றில், வடக்கில் அந்தோனிப்பிள்ளை வயித்தியம் பிள்ளையின் உரித்தாளருடைய காணியையும், கிழக்கில் இளையதம்பியின் கைம்பெண் அன்னப்பிள்ளையின் உரித்தாளருடைய காணியையும், மேற்கில் சிவகுருவின் கைம்பெண் பொன்னம்மாவின் உரித்தாளருடைய காணியையும், தெற்கில் கனகரட்னம் இராஜரட்ணத்திற்குரிய ஆதனத்தையும், இப்பொழுது 2 ம் துண்டுக் காணியாகக் குறிக்கப்பட்ட "விடான் ஒழுங்கை" யிலிருந்து பிரியும் சிறு ஒழுங்கையையும் எல்லைகளாகக் கொண்ட பெரியவளவு எனும் ஒரு லாச்சம் வரகு விவசாயமும் பதினேழு குளிகள் (1 லாச்சம் வ. வி. 17 குளிகள்) விஸ்தீரணமும், யாழ்ப்பாண மாவட்ட காணிப் பதிவகத்தில் டி. 282/248 இன் கீழ் பதிவு செய்யப்பட்டதுமான காணியிலுள்ள மரங்களும், பயிர்களும், கட்டடங்களும் அதிலுள்ளவையாவும்.

உத்தரவு பெற்ற நிலவளவையாளரான பி. ஏ. சேனாதிராஜா அவர்களால் தயாரிக்கப்பட்ட இல. 312 உம் 17.5.1968 திகதியும் கொண்ட காணிப்படத்தில் மேற்கூறிய காணியானது 1 ம் துண்டுக் காணியாக வரையப்பட்டுள்ளது.

(கோப்பு இல. டிடீஆர்/194)

9. (i) வட மாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வட பகுதி உடுவில் கோயிற்பற்று சுன்னகம் நகர சபை எல்லைக்குள் சுன்னகம் 7 ம் வட்டாரத்தில், கிழக்கில் சுப்பையாவின் பெண் செல்லம்மாவிற்குரியது இப்பொழுது எம். தம்பிராஜாவினதும் எம். நாகராஜாவினதும் ஆதனத்தையும், வடக்கில் நகரசபை ஒழுங்கையையும், மேற்கில் கணபதிப் பிள்ளையின் பெண் கனகம்மாவினதும் பிறரினதும் ஆதனத்தையும், தெற்கில் கந்தையாவின் பெண் சின்னத்தங்கத்திற்குரிய ஆதனமானது இப்பொழுது கந்தையாவின் கைம்பெண் நாகம்மாவிற்குரிய ஆதனத்தையும், எல்லைகளாகக் கொண்ட நீலிச்சீமா, ஊமன் சீமா (காணிப்படத்தின் பிரகாரம் நீலிச் சீமாவும் ஊமன்சீமாவும்) எனும் ஆறு லாச்சம்ஸ் வரகு விவசாய (6 லாச்சம்ஸ் வ. வி.) விஸ்தீரணமும், யாழ்ப்பாண மாவட்டக் காணிப்பதிவகத்தில் எச். 339/175 இன் கீழ் பதிவு செய்யப்பட்டதுமான எலக்கம் தோட்டத் தெருவிலுள்ள வரிமதிப்பெண் 73 கொண்ட காணியிலுள்ள மரங்களும், பயிர்களும் அதிலுள்ளவை யாவும் உட்பட.

உத்தரவு பெற்ற நிலவளவையாளரான சேனியர் சுப்பிரமணியம் அவர்களால் தயாரிக்கப்பட்ட இல. 436 உம் 5.6.1968 திகதியும் கொண்ட காணிப்படத்தின் பிரகாரம், மேற்கூறிய காணியானது இப்பொழுது ஆறு லாச்சம்ஸ் வரகு விவசாயமும் பதினைந்து தசம் ஏழு குளிகள் (6 லாச்சம்ஸ் வ. வி. 15·7 குளிகள்) விஸ்தீரணமும் கொண்ட 1 ம் துண்டுக் காணியாக வரையப்பட்டுள்ளது.

(ii) மேற்காணும் சுன்னகத்தில், கிழக்கில் சீனியின் பெண் இளையபிள்ளையினது ஆதனமானது இப்பொழுது சிறு ஒழுங்கையையும், வடக்கில் மேற்காணும் இளையபிள்ளையினது ஆதனமானது இப்பொழுது பொன்னுத்துரையின் பெண் சிந்தாமணிக்குரிய ஆதனத்தையும், மேற்கில் சபாபதி தம்பையாவினதும் பெண் இரத்தினத்திற்குரிய காணிகளையும், தெற்கில் நகரசபை ஒழுங்கையையும் எல்லைகளாகக் கொண்ட வீரிமான்சீமா, வதனை எனும் இரண்டு லாச்சம்ஸ் வரகு விவசாய (2 லாச்சம்ஸ் வ. வி.) விஸ்தீரணமும், யாழ்ப்பாண மாவட்டக் காணிப் பதிவகத்தில் எச். 339/176 இன் கீழ் பதிவு செய்யப்பட்டதுமான காணியிலுள்ள, மரங்களும் பயிர்களும், வடக்கு எல்லையிலுள்ள கிணற்றில் அரைப்பங்கும் உட்பட.

உத்தரவு பெற்ற நிலவளவையாளரான சேனியர் சுப்பிரமணியம் அவர்களால் தயாரிக்கப்பட்ட இல. 437 உம் 3.11.1968 திகதியும் கொண்ட காணிப்படத்தின் பிரகாரம் மேற்கூறிய காணியானது ஒரு லாச்சம் வரகு விவசாயமும் பதினாலு தசம் இரண்டு குளிகள் 1 லாச்சம் வ. வி. 14·2 குளிகள்) விஸ்தீரணமும் கொண்ட 1 ம் துண்டுக் காணியாக வரையப்பட்டுள்ளது.

(கோப்பு இல. டிடீஆர்/200).

10. வட மாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டி கோயிற்பற்று வல்வெட்டித்துறை நகரசபை எல்லைக்குள் வல்வெட்டித்துறையில், கிழக்கில் சரவணமுத்து சோமசுந்தரத்தினது உரிமையாளருடைய ஆதனத்தையும், வடக்கில் சிவலிங்கத்தின் பெண் அருந்ததிக்குரிய ஆதனமானது இப்பொழுது சிவலிங்கம் அருந்ததிக்குரிய ஆதனத்தையும், மேற்கில் விஸ்வலிங்கத்தின் பெண் தங்கம்மாவிற்குரிய ஆதனமானது இப்பொழுது ஸ்ரீஸ்கந்தராஜா கண்மணிக்குரிய ஆதனத்தையும், தெற்கில் நகரசபை ஒழுங்கையையும் எல்லைகளாகக் கொண்ட ஆனை விழுந்தான் அல்லது ஆனவுழுந்தான் எனும் பத்து குளிகள் (10 குளிகள்) விஸ்தீரணமும், பருத்தித்துறை மாவட்டக் காணிப்பதிவகத்தில் ஏ. 47/174 இன் கீழ் பதிவு செய்யப்பட்டதுமான காணியிலுள்ள, மரங்களும், பயிர்களும் அதிலுள்ளவை யாவும் உட்பட.

உத்தரவுபெற்ற நிலவளவையாளரான எஸ். பி. குழந்தைவேற் பிள்ளை அவர்களால் தயாரிக்கப்பட்ட இல. 1 உம் 28.7.1968 திகதியும் கொண்ட காணிப்படத்தின் பிரகாரம், மேற்கூறிய கானியானது ஏழொடு முப்பத்திரண்டில் நாலு குளிகள் (0 லாச்சம். வ. வி. 7, 4/32 குளிகள்) விஸ்தீரணம் கொண்ட 1 ம் துண்டுக் காணியாக வரையப்பட்டுள்ளது.

(கோப்பு இல. டிடீஆர்/203).

11. தென் மாகாணம் காலி மாவட்டம் தல்பேபற்று ஹட்டுவபியடி கம வில், வடக்கில் கஜுகஹவத்தயையும், உபசகரலகே ஹேனவையும் கிழக்கில் ஹிக்கஹகொரடுவேவத்தையையும், தெற்கில் முனமல்கஹவத்தையையும், மேற்கில் நுகஹவத்தயையும், தல்கஹவத்தயையும் எல்லைகளாகக், கொண்ட கஹட்டகஹவத்த எனும் காணியின் பதினேந்தில் நாலுபங்கின் பிரிபடாத அரைவாசி, ஒரு ஏக்கர் இரண்டு றூட் (1 ஏக்கர். 2 றூட். 0 பேர்.) விஸ்தீரணமும், காலி மாவட்ட காணிப்பதிவகத்தில் டி. 507/290 இன் கீழ் பதிவு செய்யப்பட்டதுமான காணியிலுள்ள 3 ம் முறைப்பயிரான 8 தென்னைமரங்கள், 9 ஈரப்பலா மரங்கள், 20 பாக்குமரங்கள் ஆகியவற்றை நட்டவருக்குரிய உரிமையின் சரி அரைவாசியும் உட்பட.

உத்தரவு பெற்ற நிலவளவையாளரான பி. ஜே. நாணயக்காரா அவர்களால் தயாரிக்கப்பட்ட இல. 582 உம் 16.7.1968 திகதியும் கொண்ட 2 ம் துண்டுக் காணிப்படத்தின் பிரகாரம் மேற்கூறிய 4/15 இன் பிரிபடாத ½ பங்கு இப்பொழுது பதினறு தசம் ஆறு ஆறு பேர்ச்சஸ் (16·66 பேர்) விஸ்தீரணமாகும்.

(கோப்பு இல. டிடீஆர்/246).

12. மத்திய மாகாணம் கண்டி மாவட்டம் கீழ் டம்புரா கோறளையில் உடகம்பஹா பற்றுவில் சிறிமால்வத்தயில், கிழக்கில் அம்பகஹகெதற வத்தயையும், தெற்கில் ஹெட்டிகெதறவத்தயையும், மேற்கில் கலகிட்டி யாவ பண்டார மணிக்கவேவத்தயையும், வடக்கில் டிங்கிரி எட்னுகேவத்த யையும் எல்லைகளாகக் கொண்ட, ஹெம்படனெிய கெதறவத்த எனும் காணியின் பிரிபடாத ½ பங்கு இரண்டு பெலாஸ் ஐந்து லாகாஸ் (2 பெலாஸ் 5 லாகாஸ்) நெற்பயிர்ச்செய்கை விஸ்தீரணமுடையதும் கண்டி மாவட்ட காணிப் பதிவகத்தில் ஈ. 392/204 இன் கீழ் பதிவு செய்யப்பட்டதுமான காணியிலுள்ள மரங்களும், பயிர்களும், கட்டடங் களும் அதிலுள்ளவை யாவும் உட்பட.

உத்தரவுபெற்ற நிலவளவையாளரான எல். டபிள்யூ. அரியசேன அவர்களால் தயாரிக்கப்பட்ட இல. 1216 உம் 17.8.1969 திகதியும் கொண்ட 1 ம் துண்டுக் காணிப்படத்தின் பிரகாரம் மேற்கூறிய பிரிபடாத அரைப்பங்கு காணியானது இப்பொழுது முப்பத்திநாலு பெர்ச்சஸ் (0 ஏக். 0 றூட். 34 பேர்.) விஸ்தீரணமாகும்.

(கோப்பு இல. டிடீஆர்/305)-

13. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்பு முதலியார் பகுதி, அம்பட்டலென்பஹல கொதெட்டுவாவில், வடக்கில் அரசாங்க டெவத்த தெருவையும், கிழக்கில் யாலகே டொன் டேவித் அப்புவிற் குரிய இக்காணியின் ஒரு பகுதியையும், தெற்கில் நவகெமுவாகே டானியல் பெரேராவிற்குரிய இக்காணியின் ஒரு பகுதியையும், மேற்கில் ஹெட்டிகே டொன் கரோலிஸ் வாங்கிய பகுதியையும் எல்லைகளாகக் கொண்ட தல்கஹவத்த எனும் பிரிக்கப்படாத இருபத்திநாலில் பதினலு (14/24) பங்கு அல்லது பகுதி ஏறக்குறைய ஒரு புசல் நெற்பயிர் செய்கை விஸ்தீரணமும், கொழும்பு மாவட்டக் காணிப்பதிவகத்தில் பி1, 14/3555 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டதுமான காணியிலுள்ள முழு அத்திவார மும் கிணறும் மலசலகூடமும் உட்பட.

உத்தரவு பெற்ற நிலவளவையாளரான என். டி. சிறிசேன அவர்க ளால் தயாரிக்கப்பட்ட இல. 803 உம் 6.3.1966 திகதியும் கொண்ட காணிப்படத்தின் பிரகாரம் மேற்கூறிய பிரிபடாத 14/24 பங்கு இப் பொழுது பதினைந்து தசம் இரண்டு பேர்ச்சஸ் (0 ஏக்., 0 றூட்., 15·2 பேர்.) விஸ்தீரணமுடைய காணித்துண்டாகக் காட்டப்பட்டுள்ளது.

(கோப்பு இல. டிடீஆர்/419).

14. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவகம் கோறளை, மெடபற்று ஜல்தாராவில் உத்தரவுபெற்ற நிலவளவையாளரான டி. பி. ஏ. ஜயசிங்க அவர்களால் தயாரிக்கப்பட்ட இல. 596 உம், 9.10.1955 திகதியும் கொண்ட காணிப்படத்தில் குறிக்கப்பட்ட 1 ம் துண்டு, வடக்கில் பொது வேலைப்பகுதி (பி. டபிள்யூ. டீ.) தெருவையும், கிழக்கில் 2 ம் துண்டையும் கிராமசபை தெருவையும், தெற்கில் பதிவாளர் டொன் அன்றிஸ் சமரசிங்காவிற்குரிய காணியையும், மேற்கில் பலமுல்ல ஒவிட்டா, கொன்தோட்டுவா மஹா ஒவிட்டா ஆகியவற்றின் தென் பகுதியையும் எல்லைகளாகக் கொண்ட வனுமுரே ஒவிட்டா, வனுமுரே ஒவிட்டாகெ பெல்ல எனும் இரண்டு றூட் பதினைந்தொடு அறுபத்தினலில் ஐம்பத்தொன்பது பேர்ச்சஸ் (0 ஏக்., 2 றூட்., 15,59/64 பேர்.) விஸ்தீரணமும், கொழும்பு மாவட்டக் காணிப்பதிவகத்தில் எச். 183/176 இன் கீழ் பதிவு செய்யப்பட்டதுமான காணியிலுள்ள றபர் பயிர்களும் அதிலுள்ளவை யாவும் உட்பட.

(கோப்பு இல. டீஆர்/15).

15. தென் மாகாணம், காலி மாவட்டம், பென்தோட்டவல்லலா விட்டி கோறளை இந்துருவ கொன்கலவில், உத்தரவுபெற்ற நிலவளவை யாளரான ஈ. டீ. இசட். குணவர்த்தன அவர்களால் தயாரிக்கப்பட்ட இல. 2213 உம் 2.10.1949 திகதியும் கொண்ட காணிப்படத்தில் குறிப் பிட்ட 1 ம் துண்டு, வடக்கில் இக்காணியின் 2 ம் துண்டையும், கிழக்கில் உயர்ந்த நிலத்தையும், தெற்கில் காலடிப்பாதையையும், மேற்கில் பிரதான வீதிக்குச் செல்லும் காலடிப்பாதையையும் எல்லைகளாகக் கொண்ட மெடகல்கொடகெல்ல அல்லது கலுகலபெட்ட எனும் ஒரு ஏக்கர் பதினறு பேர்ச்சஸ் (1 ஏக்., 0 றூட்., 16 பேர்.) விஸ்தீரணமும், பலபிட்டிய மாவட்டக் காணிப்பதிவகத்தில் பி. 9/16 இன் கீழ் பதிவு செய்யப்பட்டதுமான காணியிலுள்ள மரங்களும், பயிர்களும் அதி லுள்ளவை யாவும் உட்பட.

(கோப்பு இல. டீஆர்/26)

16. கிழ் மாகாணம், மட்டக்களப்பு மாவட்டம், மண்முனைபற்று நொச்சி முனையில், வடக்கில் கே. யூ. கனகரத்தினத்தினுடைய தோட்ட மானது தற்பொழுது இளையதம்பி கந்தையா ஓவசியர் அவர்களுக்கு உரியதையும், தெற்கில் கந்தப்பெருமாளினதும் பிறரினதும் தோட்ட மானது இப்பொழுது பரிகாரி கந்தப்பருடையதையும், கிழக்கில் மட்டக் களப்பிலிருந்து கல்முனைக்குச் செல்லும் தெருவையும், மேற்கில் சீனித்தம்பியினதும் பெண்ணினதும் தோட்டமானது இப்பொழுது தம்பிப்பிள்ளை சின்னத்தம்பியும் பெண்ணும், சின்னத்தம்பி நாக ரத்தினம் ஆகியவர்களுக்குரிய சீதனத் தோட்டத்தையும் எல்லைகளாகக் கொண்ட முருகப்பர் வளவு எனும் வடக்கிலிருந்து தெற்கு வரை 10 பாகங்கள், கிழக்கிலிருந்து மேற்கு வரை 21 பாகங்கள் விஸ்தீரணமும் மட்டக்களப்பு மாவட்ட காணிப்பதிவகத்தில் பி. 235/229 இன் கீழ் பதிவு செய்யப்பட்டதுமான காணியிலுள்ள மரங்களும் பயிர்களும் அதிலுள்ளவை யாவும் உட்பட.

உத்தரவு பெற்ற நிலவளவையாளரான என். சண்முகம் அவர்களால் தயாரிக்கப்பட்ட இல. 19/1964 உம் 22.4.1964 திகதியும் கொண்ட காணிப்படத்தின் பிரகாரம் மேற்கூறிய காணியானது இப்பொழுது இருபத்தாறு பேர்ச்சஸ் (0 ஏக்., 0 றூட்., 26 பேர்.) விஸ்தீரணமாகும்.

(கோப்பு இல. டீஆர்/34).

17. வட மாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், பச்சிலைப்பள்ளிப் பகுதி புலோப்பளை கோயிற்பற்று சோறன்பற்றுவில், கிழக்கில் கிராம சபை ஒழுங்கையையும், வடக்கில் சின்னப்பு சின்னையாவினதும் பங்காள ருடையதுமான காணி இப்பொழுது சின்னையா விநாயகத்தினதும் பிறரினதும் உரித்தாருடைய காணியையும், மேற்கில் மருதங்கேணி-பளைக்குச் செல்லும் தெருவையும், தெற்கில் மணல் வீதி இப்பொழுது கிராமச்சபை ஒழுங்கையையும் எல்லைகளாகக் கொண்ட கைவைக்கலடி, இலுப்பையடி எனும் நூற்றிமுப்பத்தொரு லாச்சம்ஸ் வரகு விவசாயமும், இரண்டேகால் குளிகள் (131 லாச்சம்ஸ் வ. வி. 2¼ குளிகள்) விஸ்தீரண மும், யாழ்ப்பாண மாவட்டக் காணிப்பதிவகத்தில் பி. 56/243 இன் கீழ் பதிவு செய்யப்பட்டதுமான காணியிலுள்ள தென்னை மரங்களும் அதி லுள்ளவை யாவும் உட்பட.

உத்தரவு பெற்ற நிலவளவையாளரான எஸ். சிவராமலிங்கம் அவர் களால் தயாரிக்கப்பட்ட இல. 79 உம் 1.1.1969 திகதியும் கொண்ட காணிப்படத்தின் பிரகாரம் மேற்கூறிய காணியானது இப்பொழுது நூற்றிப்பதினறு லாச்சம்ஸ் வரகு விவசாயமும் பதினொரு குளிகள் (116 லாச்சம்ஸ் வ. வி. 11 குளிகள்) விஸ்தீரணமுள்ள 1 ம் துண்டுக் காணியாக வரையப்பட்டுள்ளது.

(கோப்பு இல. டீஆர்/74).

18. (i) சப்பிரகமுவா மாகாணம் கேகாலை மாவட்டம் கல்பொட கோறளை கல்பொட பற்று கடிகமுவவில், வடக்கில் கெபல்லவத்தயின் பசுமரவேலியையும், கிழக்கில் பீரிஸ் அப்புவிற்குரிய வலவஹேனவின் எல்லையையும், தெற்கில் கிரிபண்டாவினுடைய சியம்பலா கும்புராவின் எல்லையையும், மேற்கில் வலவ்வவுக்குரிய டெகிகஹமுலஹேன எனும் பசுமரவேலியையும், எல்லைகளாகக் கொண்ட நெற்காணி சியம்பாலா கும்புராவின் பிரிபடாத எட்டில் ஒரு (1/8) பங்கு இரண்டு பெலாஸ் நெல் விவசாய (2 பெலாஸ். நெ. வி.) விஸ்தீரணமும், கேகாலை மாவட்ட காணிப்பதிவகத்தில் சி. 314/1 இன் கீழ் பதிவு செய்யப்பட்டதுமான காணியிலுள்ளவை உட்பட.

உத்தரவுபெற்ற நிலவளவையாளரான ஆர். ஜயதிலகா அவர்களால் தயாரிக்கப்பட்ட இல. 2794 ஏ உம் 27.3.1962 திகதியும் கொண்ட காணிப்படத்தின் பிரகாரம் மேற்கூறிய பிரிக்கப்படாத எட்டில் ஒரு பங்கு இப்பொழுது இருபத்தெட்டு தசம் ஒன்று இரண்டு ஐந்து பேர்ச்சஸ் (0 ஏக். 0 றூட். 28•125 பேர்.) விஸ்தீரணம் கொண்ட 3 ம் துண்டுக் காணியாக வரையப்பட்டுள்ளது.

(ii) மேற்காணும் கல்பொடபற்று கடிகமுவவில், வடக்கில் எண்டெரு வேலியையும், புஞ்சிரால கெபலவத்தயின் இமஅகலவையும், கிழக்கில் யூலிஸ் அப்புவினுடைய கெபல்லவத்தஹேனவின் குழியையும், தெற்கில் புஞ்சிமெனிக்கேயின் சியம்பால கும்புராவின் எல்லையையும், மேற்கில் உக்குஅம்மாவுடைய அலிஸ்கேஹேனவின் கற்சுவரையும், வலவ்வவிற் குரிய டெகிகஹமுலஹேனவின் எல்லையையும், பண்டாவினுடைய கெபல்ல வத்தஹேனவின் கற்சுவரையும் எல்லைகளாகக் கொண்ட கெபல்லவத்த எனும் காணியின் பிரிபடாத ஆறில் ஒரு (1/6) பங்கு இரண்டு எக்கர் (2 எக். 0 றூட். 0 பேர்.) விஸ்தீரணமும், கேகாலே மாவட்டக் காணிப் பதிவகத்தில் சி. 305/300 இன் கீழ் பதிவு செய்யப்பட்டதுமான காணியி லுள்ளவை யாவும் உட்பட.

மேற்காணும் காணிப்பட இல. 2794 ஏ இன் பிரகாரம் மேற்கூறிய பிரிபடாத ஆறில் ஒரு பங்கு இப்பொழுது முப்பத்திரண்டு பேர்ச்சஸ் (0 எக். 0 றூட். 32 பேர்.) விஸ்தீரணம் கொண்ட 7 ம் துண்டுக் காணியாக வரையப்பட்டுள்ளது.

(கோப்பு இல. டீஆர்/88)

19. மேல் மாகாணம் கொழும்பு மாவட்டம் ஹேவகம் கோறளை பள்ளே பற்று தலங்கமவில், கிழக்கில் கே. கரனிஸ் அப்புவினால் விற்கப் பட்ட கொஸ்ஹேனவத்தையையும், தெற்கில் ரி. ஜே. பீரிஸ் பெரேரா வினதும் பிறரினதும் கொலுகனத்தேவத்தயையும், மேற்கில் வயலேயும், வடக்கில் உயர்ந்த பூமியையும் எல்லைகளாகக் கொண்ட, எடம்பகஹ வத்தை எனும் காணியின் வட பகுதி 24 யாரும், கிழக்குப்பகுதி 25 யாரும், தென்பகுதி 24 யாரும், மேற்குப்பகுதி 14 யாரும் கொண்ட பிரிபடாத பகுதி பன்னிரெண்டு (12) புசல் நெல் விவசாய விஸ்தீரணமும், கொழும்பு மாவட்டக் காணிப்பதிவகத்தில் ஜி. 348/167 இன் கீழ் பதிவு செய்யப்பட்டதுமான காணியிலுள்ள பயிர்களும், வேயப்பட்ட வீடும் உட்பட.

உத்தரவு பெற்ற நிலவளவையாளரான சி. சி. விக்ரமசிங்க அவர் களால் தயாரிக்கப்பட்ட இல. 734 உம் 31.5.1968 திகதியும் கொண்ட காணிப்படத்தில் மேற்கூறிய பிரிபடாத பகுதி இப்பொழுது பதினாறு பேர்ச்சஸ் (0 எக். 0 றூட். 16 பேர்.) விஸ்தீரணமாக வரையப்பட்டுள்ளது.

(கோப்பு இல. டீஆர்/139)

20. மேல் மாகாணம் கொழும்பு மாவட்டம் மாநகர சபை எல்லைக்குள், தெற்கு ஸ்கினர்ஸ் தெருவில் (தற்போது ஸ்ரீ சங்கராஜமாவத்த) வடக்கில் லொக்கேற் ஒழுங்கையிலுள்ள வரிமதிப்பெண் ஜி. 24 கொண்ட காணி களையும், கிழக்கில் லொக்கேற் ஒழுங்கையிலுள்ள வரிமதிப்பெண் ஜி. 24ம் தெற்கு ஸ்கினர்ஸ் தெரு தற்போது ஸ்ரீ சங்கராஜ மாவத்தயிலுள்ள இல. 9 கொண்ட காணிகளையும், தெற்கில் தெற்கு ஸ்கினர்ஸ் தெரு தற்போது ஸ்ரீ சங்கராஜமாவத்தயையும், மேற்கில் தெற்கு ஸ்கினர்ஸ் தெரு தற்போது ஸ்ரீ சங்கராஜ மாவத்தயிலுள்ள வரிமதிப்பெண் ஜி. 3 ம் கொண்ட காணிகளையும் எல்லைகளாகக் கொண்ட டெல்கஹாவத்த, உத்தரவுபெற்ற நிலவளவையாளரான எஸ். டி. நவரட்ணம் அவர்களால் தயாரிக்கப்பட்ட இல. 256 உம் 8.12.1953 திகதியும் கொண்ட காணிப் படத்தின் பிரகாரம் எட்டு தசம் இரண்டு ஏழு பேர்ச்சஸ் (0 எக். 0 றூட். 8·27 பேர்.) விஸ்தீரணமும், கொழும்பு மாவட்டக் காணிப்பதிவகத்தில் ஏ. 455/189 இன் கீழ் பதிவு செய்யப்பட்டதுமான காணியிலுள்ள கட்டடங்களும், ஸ்ரீ சங்கராஜ மாவத்தயிலுள்ள வரிமதிப்பெண் 7 ம், 7/1 ம் கொண்ட காணிகளிலுள்ள யாவும் உட்பட.

(கோப்பு இல. டீஆர்/178)

21. மேல் மாகாணம் கொழும்பு மாவட்டம் சல்பிட்டி கோறளை பள்ளே பற்று இப்பொழுது கோட்டை நகரசபை எல்லைக்குள் உள்ள கங்கொடவிலவில், உத்தரவு பெற்ற நிலவளவையாளரான சி. ஆர். ஹாடிங் அவர்களால் தயாரிக்கப்பட்ட இல. 657 உம் 31.12.1948 ம் திகதியும் கொண்ட காணிப் படத்தின் பிரகாரம் வடக்கில் எல். ஹெரத் பெரேராவினுடைய இக்காணியின் ஒரு பகுதியையும், கிழக்கில் உயர்தரை வீதியையும், தெற்கில் மேற்கூறிய காணிப்படத்தில் குறிக்கப்பட்ட இக் காணியின் " பி " துண்டையும், மேற்கில் டேவத்த தெருவையும் எல்லைகளாகக் கொண்ட லொட் " ஏ " கொரககஹவத்த எனும் பத்தரை பேர்ச்சஸ் (0 ஏ. 0 றூ. 10½ பே.) விஸ்தீரணமும், கொழும்பு மாவட்ட காணிப் பதிவகத்தில் எம். 862/62 இன் கீழ் பதிவு செய்யப் பட்டதுமான காணியிலுள்ள மரங்களும், பயிர்களும், கட்டடங்களும், உயர்தரை வீதியிலுள்ள வரிமதிப்பெண் 240 கொண்ட காணியிலுள்ள யாவும் உட்பட.

(கோப்பு இல. : டீஆர்/206)

22. தென் மாகாணம் காலி மாவட்டம் தல்பே பற்று கட்டலுவாவில், வடக்கில் டீகொடவத்தயும் கொலம்பகே மலபலவத்தயையும், கிழக்கில் இக்காணியின் ஒரு பகுதியையும், தெற்கில் கொன்கஹா கொறட்டுவயும், கலுகே ருப்பேவத்தயையும், மேற்கில் கொடகொடவத்தயும், வெலி கொரட்டுவவத்தையையும் கலுகே ருப்பேவத்தயையும் எல்லைகளாகக் கொண்ட கொடாரம்பேவத்த எனும் காணியின் பிரிபடாத மூன்றில் இரண்டு (⅔) பங்கு ஒரு எக்கர், ஒரு றூட், இருபத்திமூன்று தசம் ஆறு பேர்ச்சஸ் (1 ஏ. 1 றூ. 23·6 பே.) விஸ்தீரணமும், காலி மாவட்ட காணிப் பதிவகத்தில் டி. 576/110 இன் கீழ் பதிவு செய்யப்பட்டதுமான காணியிலுள்ள நிலப்பங்கும், டி. ஏ. ஜயவர்த்தனவினால் உண்டாக்கப் பட்ட மேற்கூறிய நிலத்திலுள்ள 2 ம் முறைப் பயிர்களும், கனுகஹா என்றழைக்கப்படும் பலாமரமும், 9 முழம் அளவுள்ள ஓடு வேயப்பட்ட வீடும் அதிலுள்ளவை யாவும் உட்பட.

உத்தரவு பெற்ற நிலவளவையாளரான ஜோன் ஏ. டி. சில்வா அவர்களால் தயாரிக்கப்பட்ட இல. 20303 ம் 12.3.1938 ம் திகதியும் கொண்ட காணிப்படத்தில் மேற்கூறப்பட்ட பிரிபடாத மூன்றில் இரண்டு பங்கு இப்பொழுது இரண்டு றூட் முப்பத்திரண்டு பேர்சசஸ் (0 ஏ. 2 றூ. 32 பே.) விஸ்தீரணமுள்ள " சி " துண்டுக் காணியாக வரையப்பட்டுள்ளது.

(கோப்பு இல. டிடீஆர்/248)

23. வடமேல் மாகாணம் சிலாபம் மாவட்டம் பிட்டிகல் கோரளை ஒத்தர பலாத்தை கொணவிலவில், வடக்கில் அந்தோனி நேரிஸ் வெதராளைக்குரிய காணியையும், கிழக்கில் மர்தெலிஸ் பெரேராவுக்குரிய இக்காணியின் இரு பகுதிகளையும், தெற்கில் டொன் வெனடிக்ற் அப்புகாமிக்குரிய காணியையும், மேற்கில் தோனு பெர்லெனீனுகாமிக் குரிய இக்காணியின் ஒரு பகுதியையும் எல்லைகளாகக் கொண்டு இல. வை. 259 கொண்ட பிரிபடாத நாலில்—ஒரு (¼) பங்கு (தெற்கு எல்லையில் எழுபத்தைந்து அடி நீளமும், ஏழு அடி அகலமும் கொண்ட துண்டுக் காணி தவிர்ந்த) ஏறக்குறைய ஓர் ஏக்கர் (1 ஏ. 0 றூ. 0 பே.) விஸ்தீரண மும், சிலாபம் மாவட்டம் காணிப் பதிவகத்தில் பி. 151/125 இன் கீழ் பதிவு செய்யப்பட்டதுமான காணியிலுள்ள யாவும் உட்பட.

உத்தரவு பெற்ற நிளவளவையாளரான ஏ. சீ. எஸ். குணரட்ன அவர்களால் தயாரிக்கப்பட்ட இல. 3546 உம் 13.7.1967 ம் திகதியும் கொண்ட காணிப்படத்தில் மேற்கூறிய பிரிபடாத நாலில்—ஒரு பங்கு தற்போது ஒரு றூட் நான்கு பேர்ச்சஸ் (0 ஏ. 1 றூ. 4 பே.) விஸ்தீரணம் கொண்ட " ஏ " துண்டுக் காணியாகக் காட்டப்பட்டுள்ளது.

(கோப்பு இல. டிடீஆர்/33)

24. தென் மாகாணம் மாத்தறை மாவட்டம் மாத்தறை நகரசபை எல்லைக்குள் கொட்டுவேகொடவில், வடக்கில் நடுத்தெருவையும், கிழக்கில் மகாவலல்வேவத்தயையும், பபனிசேகேவத்தயையும், வொய்ட்டர் நோனு கேவத்தயையும், தெற்கில் 2 ம் துண்டையும், மேற்கில் 3 ம் துண்டையும் எல்லைகளாகக் கொண்டு உத்தரவு பெற்ற நிலவளவையாளரான எஸ். விக்கிரமசூரியா அவர்களால் தயாரிக்கப்பட்ட இல. 1534 உம் 24.11.1967 ம் திகதியும் கொண்ட காணிப்படத்தின் பிரகாரம் கொரலேஅரம்ப எனும் 1 ம் துண்டு முப்பத்திரண்டு தசம் மூன்று இரண்டு பேர்ச்சஸ் (0 ஏ. 0 றூ. 32·32 பே.) விஸ்தீரணமும், மாத்தறை மாவட்டக் காணிப் பதிவகத்தில் ஏ. 252/76 இன் கீழ் பதிவு செய்யப்பட்டதுமான காணியிலுள்ள மரங்களும், பயிர்களும், பழைய வரிமதிப்பெண் 561 (புதிய இல. 47) கொண்டதும் அதிலுள்ளவை யாவும் உட்பட.

(கோப்பு இல. டிடீஆர்/351)

25. தென் மாகாணம் மாத்தறை மாவட்டம் வெலிகம் கோறளை முதுகமுவவில், வடக்கில் டபிள்யூ. அப்புவினால் கோரப்பட்ட காணியையும், வடகிழக்கில் டபிள்யூ. அப்புவினாலும், டி. பாலப்புவினாலும் கோரப்பட்ட காணிகளையும், கிழக்கில் பேபியினாலும் பிறராலும் கோரப்பட்ட காணியை யும், தெற்கில் கமகே அப்புராளயினாலும் பிறராலும் கோரப்பட்ட காணியையும், தென்மேற்கிலும் மேற்கிலும் எம். எச். கலு பபனிசா வினால் கோரப்பட்ட காணியையும் எல்லைகளாகக் கொண்ட வீரகும்புரா என்னும் ஒரு ஏக்கர் இரண்டு றூட் பதினாறு பேர்ச்சஸ் (1 எக். 2 றூட். 16 பே.) விஸ்தீரணமும், மாத்தறை மாவட்டக் காணிப் பதிவகத்தில் டீ. 585/280 இன் கீழ் பதிவு செய்யப்பட்டதுமான காணியுட்பட.

உத்தரவுபெற்ற நிலவளவையாளரான டீ. எஸ். ராஜபக்ஸ அவர்களால் தயாரிக்கப்பட்ட இல. 3131 உம் 27.3.1968 திகதியும் கொண்ட காணிப் படத்தில் மேற்கூறிய காணியானது இப்பொழுது ஒரு ஏக்கர் இரண்டு றூட் ஒன்பது பேர்ச்சஸ் (1 எக். 2 றூ. 9 பேர்.) விஸ்தீரணமுள்ளதாக வரையப்பட்டுள்ளது.

(கோப்பு இல. டிடீஆர்/353)

26. தென் மாகாணம் மாத்தறை மாவட்ட எல்லைக்குள் வெல்கம, வடக்கில் இக்காணியின் 1 ம் துண்டையும், கிழக்கில் தெருவையும், தெற்கில் டபிள்யூ. டஜோ வசிக்கும் கஹட்டகஹவத்தயையும், மேற்கில் கொன்கஹவத்தயையும், செனவீரகேவத்தயையும் எல்லைகளாகக் கொண்டு உத்தரவு பெற்ற நிலவளவையாளரான எம். விமலசூரியா அவர்களால் தயாரிக்கப்பட்ட இல. 375 உம் 12.2.1967 திகதியும் கொண்ட காணிப்படத்தில் கஹட்டகஹவத்த எனும் 2 ம் துண்டு ஒரு றூட் முப்பத்தொன்பது தசம் இரண்டு ஐந்து பேர்ச்சஸ் (0 எக். 1 றூட் 39·25 பேர்.) விஸ்தீரணமும், மாத்தறை மாவட்டக் காணிப்பதிவகத்தில் ஏ. 257/4 இன் கீழ் பதிவு செய்யப்பட்டதுமான காணியிலுள்ள மரங்களும் பயிர்களும் அதிலுள்ளவையாவும் உட்பட.

(கோப்பு இல. டிடீஆர்/355)

27. மேல் மாகாணம் கொழும்பு மாவட்டம் கொழும்பு முதலியார் பகுதி அம்பட்டலென் பகல கொட்டாட்டுவில், வடக்கில் கொழும்பு–இரத்தினபுரிக்குச் செல்லும் பிரதான வீதியையும், கிழக்கில் இக்காணியின் ஒரு பகுதியையும், தெற்கில் மகா ஓவிட்டாவையும், மேற்கில் இக்காணியின் ஒரு பகுதியையும் எல்லைகளாகக் கொண்டு உத்தரவு பெற்ற நிலவளவையாளரான என். சி. கூரே அவர்களால் தயாரிக்கப்பட்ட இல. 58/1943 உம் 19.12.1943 திகதியும் கொண்ட காணிப் படத்தில் வலராவெல்ல அல்லது வலராவெல்ல ஓவிட்டா, ஒன்பது தசம் ஏழு ஐந்து பேர்ச்சஸ் (0 ஏக். 0 றூட். 9·75 பேர்.) விஸ்தீரணமும், கொழும்பு மாவட்ட காணிப்பதிவகத்தில் புதிய தொடர்ச்சி பி. 516/307 இன் கீழ் பதிவு செய்யப்பட்டதுமான காணியிலுள்ள கட்டடங்களும், மரங்களும், பயிர்களும் அதிலுள்ளவை யாவும் உட்பட.

(கோப்பு இல. டிடீஆர்/389)

28. மேல் மாகாணம் கம்பஹா மாவட்டம் சியனே கோறளை கங்கபொட பற்று வீரஹெரவில் வடக்கில் ஜி. துண்டையும், கிழக்கில் கிராமசபை தெருவையும் கற்பாறையையும், தெற்கில் ஐ துண்டையும் கலபொடவத்தையும், மேற்கில் கற்பாறையையும், எல்லைகளாகக் கொண்டு உத்தரவு பெற்ற நிலவளவையாளரான ஜே. மலலகம அவர்களால் தயாரிக்கப்பட்ட இல. 1232 உம் 26.10.1954 திகதியும் கொண்ட காணிப் படத்தின் பிரகாரம் கலபொடவத்த எனும் எச். துண்டு, ஒரு றூட் ஏழு தசம் எட்டு சைபர் பேர்ச்சஸ் (0 ஏக். 1 றூட். 07·80 பேர்.) விஸ்தீரணமும், கம்பஹா மாவட்டக் காணிப் பதிவகத்தில் புதிய தொடர்ச்சி டி. 58/363 இன் கீழ் பதிவு செய்யப்பட்டதுமான காணியிலுள்ள மரங்களும், பயிர்களும் அதிலுள்ளவை யாவும் உட்பட.

(கோப்பு இல. டிடீஆர்/455)

29. மத்திய மாகாணம் கண்டி மாவட்டம் கீழ் ஹேவாஹட்ட ஹேவாவிஸ்ஸ கோறளை பட்டியகமவில், கிழக்கில் ஜுவானிஸ் அப்புவுக்குரிய காணியையும், தெற்கில் முகமது தம்பிக்குரிய காணியையும், மேற்கில் டுமிங்கோ அப்புவுக்குரிய காணியையும், வடக்கில் உயர் தெருவையும் எல்லைகளாகக் கொண்ட மடக்கலேதெனிய, உத்தரவு பெற்ற நிலவளவையாளர் ஆர். கனகரட்ணம் அவர்களால் தயாரிக்கப்பட்ட காணிப்பட இல. 372 உம் 21.7.1967 திகதியும் கொண்ட 1 ம், 2 ம் காணித்துண்டுகளின் பிரகாரம் தற்போது ஆறு ஏக்கர், ஒரு றூட், இருபத்தெட்டு பேர்ச்சஸ் (6 ஏக். 1 றூட். 28 பேர்.) விஸ்தீரணம் கொண்டதும், கண்டி மாவட்டக் காணிப்பதிவகத்தில் ஜி. 128/89 இன் கீழ் பதிவு செய்யப்பட்டதுமான காணியிலுள்ள நெல் வயலும், தேயிலைப்பயிரும், அதிலுள்ளவை யாவும் உட்பட.

(கோப்பு இல. டிடீஆா/295)

11–298

இலங்கை அரசாங்க அச்சகப் பகுதியிற் பதிப்பிக்கப்பெற்றது